By regd Letter with A/D

அனுப்புநர்

கூடுதல் உதவி தொடக்கக்கல்வி அலுவலர்,
உதவி தொடக்கக்கல்வி அலுவலகம்,
உடன்குடி.

பெறுநர்

செயலாளர்,
ஆவே மரியா, 9, அரிசி கடைத்தெரு,
சாத்தான்குளம். 628704

ந.க.எண்.179/அ1/07 நாள்: 11.6.07

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் - பதில் அளித்தல் சார்பு.

பார்வை: தங்களின் கடிதம் நாள்:28.4.07 மற்றும் தங்களின் மணியாடர் தொகை கிடைக்கப் பெற்ற நாள்:5.06.07.

***

தங்களின் கடிதத்தின்படி உடன்குடி புனித அந்தோனியார் ஆர்.சி நடுநிலைப்பள்ளி தலைமைஆசிரியை சிஸ்டர் குழந்தை தெரஸ் மாறுதல் மூலம் 18.10.2006 முதல் தலைமைஆசிரியையாக சேர்ந்துள்ளார். மேற்படி ஆணை நகல் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. அதன் பின்பு உள்ள ஆவணங்களின் அலுவலக நகல்கள் இவ்வலுவலகத்தில் உள்ளது. சிஸ்டர் குழந்தைதெரஸ் அவர்களின் நியமன ஆணை மற்றும் அவர்களின் பணிப்பதிவேடு ஆகியவைகள் அந்தப் பள்ளியின் தாளாளர் அல்லது சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் தான் உள்ளது. அவர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் ஆர்.சி நடுநிலைப்பள்ளி, உடன்குடி ஒரு சிறுபான்மைப் பள்ளி ஆதலால் மாறுதல் சம்பந்தமாக ஏற்பளிப்பது கூடுதல் உதவி தொடக்கக்கல்வி அலுவலர் தான். மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை உடன்குடி ஆர்.சி நடுநிலைப்பள்ளி ஒரு சிறுபான்மை பள்ளி என்பதால் இலாகா தலையிட முடியாது. மேலும் பள்ளியில் நியமனம் செய்யப்படும் தலைமைஆசிரியர் விதிகளில் கண்ட உரிய தகுதி பெற்று இருப்பின் அவரை ஏற்பு செய்ய வேண்டியது இலாகாவின் கடமையாகும். எனவே பள்ளித் தலைமை ஆசிரியை சிஸ்டர்.குழந்தைதெரஸ் உரிய தகுதிகளை பெற்றிருப்பதால் அவருடைய நியமனம் ஏற்பு செய்யப்பட்டது.

மேலும் 5.6.07ல் பெறப்பட்ட மணியார்டர் தொகை ரூ.30/-(ரூபாய் முப்பதில் ஜெராக்ஸ் நகலுக்காக செலவு ரூ.2/- ரூபாய் இரண்டு மட்டும் போக மீதித் தொகை ரூ.28/-(ரூபாய் இருபத்து எட்டு மட்டும்) திரும்பவும் மணியார்டர் கமிஷன் போக அனுப்பப்படுகிறது.

11/6/07

கூடுதல் உதவி தொடக்கக்கல்வி அலுவலர்,
உடன்குடி.

நகல்:

1. அரசு துணைச் செயலர் அவர்கள், பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.